**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006**

ந.க. எண். 8584 / ஈ1 / 2012, நாள் 24.04.2012

பொருள் : மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், சென்னை–6 – அரசு கேபிள் தொலைக்காட்சி மூலம் கல்வி ஒளிபரப்புச் சேவை – ஆர்வமுள்ள ஆசிரியர்களின் தன் விவரப்பட்டியல் சேகரிப்பு – சார்பு.

பார்வை : 110வது விதியின் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2011.

... ... ...

தமிழகக் கல்வி வரலாற்றில் முப்பருவ முறையையும், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையினையும் அறிமுகப்படுத்தியுள்ளதைத் தொடர்ந்து, தரமான கல்வியை இலக்காகக் கொண்டுள்ள **அரசு, கேபிள் டி.வி. வழியாக புதிய அரசு கல்விஒளிபரப்புச் சேவை (Government Educational Channel) ஒன்றைத் துவக்குவதாக** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இச்சேவை 2012–13ஆம் ஆண்டிலிருந்து தமது கல்வி ஒளிபரப்பைத் தொடங்கும். இதில் தினந்தோறும் 1 முதல் 12ஆம் வகுப்பு பாடத்திட்டங்களிலிருந்து பாடப்பகுதிகள், திறமை வாய்ந்த ஆசிரியர்களால் பல்வேறு நிகழ்ச்சிகளாகத் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்படும். இதற்காக கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் பணியில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. ஜூன் ஒன்றாம் தேதி முதல் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக மாலை நேரங்களிலும், வீட்டிலிருந்தே கல்வி கற்கும் வகையில் இக் கல்வி ஒளிபரப்புச்சேவை அமையும். இதற்கென மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் ஆர்வமும், அனுபவமும் உள்ள ஆசிரியர்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. எனவே கல்வி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க விரும்பும் ஆசிரியர்கள் கீழ்க்கண்ட படிவத்தில் விவரங்களை அளிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

நிகழ்ச்சிகள் மாணவர்களுக்குப் பயனுள்ளதாகவும் சுவையாகவும் கற்றலில் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையிலும் அமையவேண்டும்.

**தன்விவரப்பட்டியல்**

| வ. எண். | பெயர் மற்றும் பதவி, பள்ளி முகவரி | கற்பிக்கும் பாடம் | நிகழ்ச்சிகள் தயாரித்தலில் சிறப்புத் திறன்/ தகுதிகள் | வீட்டு முகவரி | அலைபேசி எண் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**குறிப்பு :**

- **மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் இக்கடிதத்தைப் போதிய பிரதிகள் எடுத்து, வட்டார வளமையங்களுக்குப் பங்கேற்பாளர்கள் மூலம் அனுப்ப வேண்டும். 25.04.2012 அன்று நடைபெறும் பயிற்சியின்போது 15 மையங்களிலும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் இக்கடிதச் செய்தி படித்துக் காட்டப்பட வேண்டும். 26.04.2012 மற்றும் 27.04.2012 ஆகிய நாள்களில் நடைபெறும் ஆசிரியப் பயிற்சிகளில் இக்கடிதம் அனைத்து ஆசிரியர்களுக்கும் படித்துக் காட்டப்பட வேண்டும். கடித நகல் ஒன்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.**
- **மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்தும் மையங்களுக்கு இக்கடித நகலை அனுப்பி மையப் பொறுப்பாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து உயர்நிலை, மேனிலைப் பள்ளி ஆசிரியர்களையும் இத்தகவல் சென்றடையச் செய்ய**

www.tamilagaasiriyar.blogspot.in

**வேண்டும். அவ்வாசிரியர்கள் மேற்கண்ட பட்டியலில் தங்களது விவரங்களை அனுப்ப மையப் பொறுப்பாளர் மூலம் உரிய நடவடிக்கைகளை முதல்வர்கள் மேற்கொள்ள வேண்டும்.**

**இயக்குநர்**

பெறுநர்

1. அனைத்து ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்.
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்

1. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
2. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை–6.

} தகவலுக்காகக் கனிவுடன் அனுப்பப்படுகிறது.

www.tamilagaasiriyar.blogspot.in